**B-FIT GYM**
Ladies, Gents, Children
Fitness Centre
**Weight Reduction, Height gaining, Weight gaining, Body shape, Inches loss, Body fitness**
**HAMEEDIA SHOPPING MALL**
IInd Floor, No.108,109, Triplicane High Road, Chennai - 600005.
Ph : 044-42663307
Cell : 98417 07251

TRIPLICANE, CHEPAUK, MYLAPORE, ROYAPETTAH

# TRIPLICANE NEWS

# டிரிப்ளிகேன் நியூஸ்

மலர் - 5 இதழ் - 16 16 - 08- 2009 (16- 31) (மாதமிருமுறை) பல்சுவை இதழ்
நிறுவன ஆசிரியர் : A. பாக்யராஜ், இணை ஆசிரியர் : S. சஜீவகுமார்

**பரத் சங்கித் நிகேதன்**
இசை நாட்டியப் பள்ளி
73, டி.பி.கோயில் தெரு, முதல் சந்து, சென்னை-600 005.
**போன் : 4356 8169, 2848 0931,**
**செல் : 99411 24431**
**வாய்ப்பாட்டு, பரதநாட்டியம், மிருதங்கம், தபலா, டிரம்ஸ், கீபோர்டு, வயலின், கிடார் ஆகியவை கற்றுத் தரப்படும்**

## பன்றிக் காய்ச்சல் : தடுக்க என்ன செய்ய வேண்டும்?

பன்றிக் காய்ச்சல் மெக்ஸிகோ நாட்டில் உருவானது. அதைத் தொடர்ந்து பல்வேறு நாட்டில் பன்றிக் காய்ச்சல் நோய் பரவி பலர் இறந்துள்ளனர்.

இந்தியாவிற்கு இந்த நோய் வராது என்றுதான் முதன் முதலில் எல்லோராலும் நினைக்கப்பட்டது. ஆனால் வெளிநாடுகளிலில் இருந்து வந்தவர்கள் மூலம் இந்தியாவிலும் தற்போது பரவி பலரை பலிவாங்கிவிட்டது.

நோய் எதிர்ப்புத் தன்மை குறைந்த இரண்டு முதல் 17 வயதுள்ளவர்கள் மற்றும் 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கே இந்தக் காய்ச்சல் ஏற்படுகிறது.

காற்றில் பரவும் வைரசை (எச்1என்1) சுவாசிப்பதால் பன்றிக்காய்ச்சல் நோய் ஏற்படுகிறது.

**பன்றிக் காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க என்ன செய்ய வேண்டும் :**

சளி, காய்ச்சல், தும்மல் நீடித்தால் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

பன்றிக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் இரண்டு முதல் 16 வயதுள்ள குழந்தைகள் 20 மி.கி. முதல் 60 மி.கி மற்றும் பெரியவர்கள் 75 மி.கி. டாமீ புளூ என்ற மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமே இம்மாத்திரையை சாப்பிட வேண்டும்.

நோய் தடுப்பு நடவடிக்கை எனக் கருதி பாதிக்கப் படாதவர்கள் கண்டிப்பாக இம்மாத்திரையை சாப்பிடக்கூடாது.

வெளியில் சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தால் முதலில் கை, கால்களை கழுவி விட வேண்டும்.

சளி, தும்மல் இருப்பவர்களிடம் சிறிது நாள் தள்ளியே இருக்க வேண்டும்.

கைக்குட்டை அல்லது மாஸ்க்கை வாய், மூக்குகளில் கட்டிக்கொண்டு வெளியில் செல்லுங்கள்.

மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் போகாதீர்கள்.

பஸ் ஸ்டாண்ட், ரயில்வே ஸ்டேஷன், விமான நிலையம் அருகில் உள்ளவர்கள் வந்து இறங்கும் பயணிகளிடம் பேச்சுக் கொடுக்காதீர்கள்.

வெளியூர்கள், வெளிநாடுகளில் இருந்து வந்து இறங்கும் பயணிகளிடம் ஆட்டோ டிரைவர்கள், கால்டாக்சி டிரைவர்கள் வாயில் கைக்குட்டை அல்லது மாஸ்க் கட்டிக் கொண்டு பேசுங்கள்.

குழந்தைகளிடம் உடனடியாக பரவிவிடும் அபாயம் இருப்பதால் பெற்றோர்கள் குழந்தையை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். எப்போதும் அவர்களை சுகாதாரமான முறையில் பாதுகாக்க வேண்டும்.

சென்னையில் உள்ள கிங் இன்ஸ்டிடியூட் மட்டுமே இந்த காய்ச்சலை கண்டறியும் சோதனைக்கூடமாக உள்ளது. அரசு இந்நோயைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**SRI SAI MOTORS**
**ALL CAR SERVICE**
**CONTACT : R. JEEVA**
**9940012824 / 9789843557**





- Maintenance Service
- Free Pick-up & Drop
- Surface Refine Mark
- Body Repaints
- A/c. & Electrical work
- Insurance Claims

**New Opening Shop**
**25% Discount at Labour Bill**
*Buying & Selling of Cars*
**No.22/26, Jani Batcha Street, Royapettah, Chennai - 600 014**
**Ph : 044 - 42155580**

**VISHALAM BUILDERS**
**Off : No. 32, Pillaiyar Koil Street, Triplicane, Chennai - 600 005. Ph : 2852 9413, 2842 0938, Cell : 9962607150, Contact Time : 11.00 am to 6.00 pm**
**FLATS FOR SALE**
**No.3/10, Krishnappa Street, Chepauk, (near O.V.M. Street) Chennai - 600005.**

- நீடித்து உழைக்க தரமான பொருட்களை கொண்டு சிறந்த Engineer மூலம் வடிவமைக்கப்படுகிறது.
- குடிநீர் தட்டுப்பாடு இல்லாமல் இருக்க வசதி செய்யப்பட்டுள்ளது.
- காற்று வெளிச்சம் உள்ளவாறு கட்டப்படுகிறது.
- Two Wheeler Parking, & Lift வசதியுடன் கட்டப்படுகிறது.
- நடுத்தர மக்களுக்காக உயர்தரமாக கட்டப்படுகிறது.
- Flat availability குறைவாக உள்ளதால் உடனே Booking செய்யவும்.
- Flat for available





**CHENNAI FASHION**

Ladies Tailoring & Designing,
Cosmetics, Burkha, Fancy Jewellery


# 101, Jani Jahn Khan Road,
Royapettah, Chennai - 14

**9884141685, 9962112545**

**ஏ.ஏ.எலக்ட்ரிகல் சர்வீஸ் சென்டர்**
**A.A.ELECTRICAL & SERVICE CENTRE**


- வீடு மற்றும் வியாபார ஸ்தலங்கள் அனைத்திற்கும் ஒயரிங் செய்து தரப்படும் சிறிய வேலைகளாக இருந்தாலும் செய்து தரப்படும்
- அனைத்து வகையான எலக்ட்ரிக்கல் பொருட்களும் சர்வீஸ் செய்து தரப்படும் வீட்டிற்குத் தேவையான அனைத்து எலட்ரிக்கல் பொருட்களும் கிடைக்கும்

**ஏ.அத்திக், உரிமையாளர்**



5/3, ஜெனரல்சாமி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.
போன் : (Off) **044-39165858, 9884326678,**
(Res) **93807 79072,** Credit card Accept

*Md. Kasim* **SANTHI MEDICALS** ✚



**MEDICAL & GENERAL**
No.98, (New No.225), Pycrofts Road,
Royapettah, Chennai - 600014.
**Cell : 9884220116, Ph : 28482307**
**FREE HOME DELIVERY**


## ஓர் முக்கிய அறிவிப்பு

டிரிப்ளிகேன் நியூஸ் கடந்த ஐந்து வருடங்களாக இடைவிடாது உங்களின் மேலான ஆதரவுடன் வெளிவந்துகொண்டிருக்கிறது என்பதை தாங்கள் அறிவீர்கள்.

டிரிப்ளிகேன் நியூஸ் பெயரில் எங்கள் அடையாள அட்டை இல்லாமல் சிலர் விளம்பரம் வாங்குவதாக எங்களுக்கு புகார் வந்திருக்கிறது.

ஆகவே விளம்பரதாரர்கள் டிரிப்ளிகேன் நியூஸ் சார்பாக விளம்பரங்கள் வேண்டி முகவர்கள் வந்தால் முதலில் அடையாள அட்டையை காண்பிக்கும்படி கேட்டு வாங்கி பார்த்த பின்பு விளம்பரங்கள் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அப்படி இல்லையென்றால் எங்கள் தொலைபேசி எண்ணிற்கு உடனே போன் செய்து உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அடையாள அட்டை இல்லாமல் விளம்பரங்கள் கொடுத்தால் அதற்கு டிரிப்ளிகேன் நியூஸ் பொறுப்பல்ல.

இப்படிக்கு
**A. பாக்கியராஜ்**
ஆசிரியர், டிரிப்ளிகேன் நியூஸ்


**Good Luck Travel Links**

**A.O. Mohamed Sharbudeen** Good Luck (A Symbol of Hospitality)
Mobile : 94440 81851
Email : goodlucktravellinks@yahoo.com
www.goodlucktravellinks.com
Landline : 91 44 28447682
91 44 4356 7869
Tele Fax : 91 44 28447869

**Cabs (A/c & Non A/c Vehicles) Package Tours, Tickets (Bus, Train, Air), Hotel Reservations, Visa, Noc.Mobile Recharge & Accessories, Easy Bill Ltd., (Authorised Bill Collection Center)**



# 7/4, Venkatachalam Chetty Street, Triplicane, Chennai - 600005


## அருள்மிகு பார்த்தசாரதி கோயிலில் சுதந்திரதினத்தை முன்னிட்டு அன்னதானம்



சுதந்திர தின விழாவை முன்னிட்டு திருவல்லிக் கேணியில் உள்ள அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலில் சுமார் 1000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

15ம் தேதி சுதந்திர தின விழாவை முன்னிட்டு நடந்த இந்த அன்னதானம் வழங்கும் விழாவில் திரு. ஏஆர்பிஎம் காமராஜ், MC, மண்டல குழு தலைவர், திரு. பொ.மா. சேரன்,MC, திரு. வனஜா,MC அவர்களும் கோயில் நிர்வாகி பொ. ஜெயராமன், துணை ஆணையர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

பெருவாரியான பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு அன்னதானம் பெற்று மகிழ்ந்தனர்.

## பொட்டு வைப்பது ஏன்?

முக்கண் பெமானான சிவனுக்கு மட்டுமின்றி மனிதருக்கும் கூட ஞானக் கண் உள்ள இடம் புருவத்தின் மத்தியாகும். அதனால் தான் இந்த இடத்தில் பொட்டு வைத்து ஞான உணர்வைத் தூண்டுகிறோம். இதனால் மனதில் அமைதியும் பரவசமும் ஏற்படுகிறது.

நெற்றியில் பொட்டு இட்டுக் கொள்ளும் போதெல்லாம் ஊனக் கண்ணால் உலகைப் பார்க்கும் நாம் ஞானம் என்னும் மூன்றாவது கண்ணால் உலகை தெய்வமயமாகப் பார்க்க வேண்டும் என்ற உணர்வு எழுகிறது.

அதனால் தான் பொட்டு வைத்த முகம் தெய்வீகக்களையோடு அமைதியோடு திகழ்கிறது. எவ்வித தீய சக்தியும் அதனை வைத்து இருப்பவரை அண்டாமல் காக்கிறது.


**AJAY MARKETING**

AJAY AQUA PACKAGED
DRINKING WATER
*Specialist in Gift Articles*
*H.O : 6/23, Agathimuthan St,*
*(Near Union Bank) Triplicane,*
*Chennai - 5.Ph : 42157327, 55349948*
*9840900631, 32, 33, 34*
*B.O : 23/2, Vadugu Street, Near Bazar Road,*
*Mylapore, Chennai - 600004. Ph : 98403 77004*
சுத்தமான, சுகாதாரமான, சுவையான குடிநீர் தரம் பலமுறை சுத்திகரிப்பு மற்றும் ஆய்வு பரிசோதனைகளை அடிப்படையாக கொண்டது. BIS ஆல் அங்கீகரிக்கப்பட்டது.
உங்கள் தாகம் தணிக்க உங்கள் இல்லம் தேடிவர அணுகுங்கள்!
இலவச டோர் டெலிவரி!!

10% to 30% தள்ளுபடி செய்த விலையில்

**ரஹ்மான் பிளாசாவின்**




**பண்டிகைகால சிறப்பு தள்ளுபடி**

எங்களிடம் பிரஸ்டீஜ், பிரிமியர், பிஜின், பட்டர்பிளை, பிரித்தி மிக்ஸி, சௌபாக்கியாகிரைண்டர், ஈகிள், மில்டன், செல்லோ, ஹாட்பேக், பிளாஸ்க், நில்கமல், சுப்ரீம், சேர், விஜபி, அஞ்சலி போன்ற உயர்தரமான கம்பெனி பொருட்களும், எவர்சில்வர், பித்தளை, அலுமினியம் பிளாஸ்டிக், பேபி அயிட்டம், கிஃப்ட் பொருட்களும் அனைத்தும் ஸ்பெஷல் தள்ளுபடி செய்த விலையிலும், மிகக் குறைந்த விலையிலும், மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

**எக்ஸ்சேஞ்ச் கொண்டாட்டம்**

உங்களது பழைய குக்கர், மிக்ஸி, கேஸ் ஸ்டவ், கிரைண்டர், நான்ஸ்டிக், எவர்சில்வர், பித்தளை, அலுமினியம், செம்பு போன்ற பொருட்களை கொடுத்து புதிய பொருட்களை வாங்கி செல்லுங்கள். அனைத்தும் புத்தம் புதிய ரகங்கள். மிகக் குறைந்த விலையில் கிடைக்கும் இடம்

**ரஹ்மான் பிளாசா**
புதிய எண். 46, பாரதி சாலை, (ஸ்டேட் பேங்க் ATM எதிரில்)
திருவல்லிக்கேணி, சென்னை - 5.
போன் - 42155200, 42155272

எல்லாவித உயர்தரமான கம்பெனி பொருட்களும் கிடைக்கும்
எல்லா மேஜர் கிரெடிட் கார்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

Condition Apply

# விநாயகர் சதுர்த்தி விழா :

# விநாயகர் வழிபாட்டில் சில நடைமுறைகள்

எந்த தெய்வத்திற்குப் பூஜை செய்தாலும் முதலில் விநாயகருக்கு ஸங்க்ரஹ பூஜை ஒன்றைச் செய்த பிறகே - அந்த தெய்வத்திற்கான பிரதான பூஜையைத் தொடங்குவது வழக்கம்.

அந்த விநாயகர் பூஜையில் நாம் கணபதியை வழிபட நெற்றிப் பொட்டில் குட்டிக் கொண்டுக் கீழ்க்கண்ட சுலோகத்தைச் சொல்வது வழக்கம்.

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்

ப்ரஸந்ந வதநம் த்யாயேத் ஸர்வ விக்நோப சாந்தயே

இதில் கணேசரை வர்ணிக்க ஐந்து வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

1. சுக்லாம் பரதர வெள்ளை வஸ்த்ரம் கட்டிக் கொண்டிருப்பவர். 2. விஷ்ணும் எல்லா இடத்திலேயும் பரவியிருப்பவர். 3. சசிவர்ணம் நிலா மாதிரி பால்போன்ற நிறமுடையவர். 4. சதுர்புஜ நான்கு கைகள் உள்ளவர். 5. ப்ரஸந்ந வதநம் நல்ல மலர்ந்த முகமுள்ளவர்.

இந்த ஐந்து வார்த்தைகளில் ஒவ்வொன்றும் ஒரு குட்டாக ஐந்து தரம் நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ள வேண்டும். வலக்கையை இடக்கையின் முன் வைத்து வலக்கையால் இடப்புறத்திலும், இடக் கையால் வலப்புறத்திலும் முன் மண்டையில் குட்டிக் கொள்வது முறை.

விநாயகர் காக்கை வடிவம் கொண்டு அகஸ்தியரின் கமண்டலத்தில் இருந்த நீரைக் கவிழ்த்து காவிரி பெருக்கெடுத்தோடச் செய்தார்.

பின் காக்கை வடிவம் நீங்கி அந்தணச் சிறுவனாய் மாறினார். அவரைத் துரத்தித் தலையில் குட்டுவதற்காக விரைந்தார் அகஸ்தியர். பின் விநாயகர் தமது உண்மை வடிவில் காட்சியளித்தார். குட்டுவதற்கு ஓங்கிய கையால் தம் நெற்றியில் குட்டிக் கொண்டார் அகஸ்தியர்.

"உமது திருமுன்னர் நெற்றியில் குட்டிக் கொண்டு வழிபடும் மெய்யன்பர்களின் குறை தீர்த்து அருள் புரிய வேண்டும்" என்று அகஸ்தியர் வேண்டினார்.

விநாயகப் பெருமானும் அவ்வாறே செய்வதாக வாக்களித்தார். தலையில் குட்டிக் கொள்ளும் இடத்தில் (இரு புறமும்) உள்ளது 'கூனுட்ணீணிணூச்டூ டூணிஞனு'. பேச்சுத் திறன் நன்கு வளர்ச்சியடைய காது கேட்பது அவசியம். ஞாபக சக்தியைத் தூண்டும் நாடிகள் அமைந்துள்ள இடமும் இதுவே. 'கூனுட்ணீணிணூச்டூ டூணிஞனு' தனது பணியைச் செவ்வனே செய்தால் மட்டுமே இது சாத்தியம்.

நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ளும்போது அங்கே உள்ளடங்கி இருக்கும் அமிர்த கலசத்தை எழுப்பி அங்கே உள்ள அமிர்தம் தேஹம் முழுவதும் பரவச் செய்வதற்கே என யோகிகள் கூறுவர்.

விநாயகர் வழிபாட்டில் மட்டுமே இடம்பெறும் இன்னொரு சிறப்பு அம்சம் தோப்புக்கர்ணம் போடுவது.

நமது மூலாதாரத்தில் உள்ளவர் கணபதியே என்பதை எடுத்துக் காட்டவே இந்த வழிபாட்டுச் செயல்.

தோப்புக் கரணம் மூலாதாரத்தில் உள்ள சுஷும்னா நாடியைத் தட்டி எழுப்புவதற்காகவே போடப்படுகிறது.

விநாயகருக்கு முன் காதுகளைப் பிடித்து, நெற்றியில் குட்டிக் கொண்டு, தோப்புக்கரணம் போடுவதும் - எவ்வளவு உயர்ந்த மனிதன் ஆனாலும் சிந்தையைக் கட்டுப்படுத்தி, வாழ்க்கையில் பணிவுடன் இருக்க வேண்டும் என்பதைக் காட்டவே.

அடங்காதவனுக்கும் பணிவு வரத் தோப்புக்கர்ணம் போடவைக்கும் முறை இந்த அடிப்படையிலேயே ஏற்பட்டது.

"தோர்பி கர்ணம்" என்பதே தோப்புக் கர்ணம் என்று மாறியது. "தோர்பி" என்றால் இரண்டுக்கும் மேற்பட்ட கைகளைக் குறிக்கும். இது பஹு வசனம். பன்மைச் சொல். "கர்ணம்" என்றால் காது. "தோர்பி கர்ணம்" என்றால் கைகளால் காதைப் பிடித்துக் கொள்வது.

ஒரு சமயம் மஹாவிஷ்ணுவினுடைய சக்கரத்தை அவரது சகோதரி மைந்தனான பிள்ளையார் தம் வாயில் போட்டுக் கொண்டு விட்டாராம்.

அவரைச் சிரிக்க வைத்து அவர் வாயிலிருந்து சக்கரத்தைக் கீழே விழச் செய்ய மஹாவிஷ்ணு தனது நான்கு கைகளாலும் காதுகளைப் பிடித்துக் கொண்டு கால்களை மடக்கி தாழ்ந்தும் எழுந்தும் கோணங்கி செய்தாராம்.

குழந்தை கணேசர் இதைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தாராம். சக்கரமும் கீழே விழுந்ததாம்.

ஆகவே தோப்புக் கரணம் போடுவது குழந்தை தெய்வமான பிள்ளையாரை சந்தோஷிக்கச் செய்யவே.

இன்னொரு சம்பவமும் இதோடு கூறப்படுவதுண்டு.

தேவர்கள் கயமுகாசுரனின் (கஜமுகாசுரன்) சந்நிதியில் தோப்புக் கரணம் இட்டு வந்தனர். அவனை விநாயகர் ஸம்ஹரித்த பிறகு அவன் முன்னர் இட்ட தோப்புக் கரணத்தையும், தலைக் குட்டுதலையும் நன்றியறிவு காரணமாக விநாயகரின் திருமுன்பு செய்யத் தொடங்கினர்.

இன்று தொட்டு எம்மைப் போன்று உலகுளோர் உன்முன் தோப்புக் கரணம் போட்டு வணங்கினால் அவர்கள் குறை தீர்த்து நல்லருள் செய்ய வேண்டுமென வேண்டினர்.

"உன்றன் முன்னம் உலகுளர் யாவரும்

இன்று தொட்டெமைப் போல் இப்பணிமுறை

நன்று செய்திட நல்லருள் செய்கென" என்பது கந்தபுராணம்.

விநாயக பெருமானும் தேவர் கூற்றிற்கு அருள் பாலித்தார். இதிலிருந்து விநாயகர் முன் தோப்புக்கரணம் போட்டு வழிபடும் மரபு உண்டானது.

ஒரு குற்றவாளி தான் செய்த குற்றத்திற்காக தண்டனையைத் தானே அனுபவிப்பது போல, கடவுளின் சமீபத்தில் செல்வதற்கு தகுதியில்லாதபடி குற்றங்கள் நிறைந்தவர். தாம் செய்த குற்றத்திற்குத் தாமே தண்டனை அனுபவிக்க மேற்கூறியவாறு செய்து, இனி அவ்விதக் குற்றங்கள் செய்ய மாட்டேன் என உறுதி செய்வதே ஆகும்.

### பிள்ளையார் வழிபாட்டில் மூன்றாவது சிறப்பு அம்சம் சிதறுகாய் போடுவது.

விநாயகர் முன் தேங்காய் விடலை இடுவது, தேங்காய் சிதறுவது போல நமது பாவங்கள் அல்லது நமக்கு ஏற்படும் இடையூறுகள் யாவும் சிதற வேண்டும் என்ற தங்கள் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துவது.

அஹங்கார மண்டையோட்டை உடைத்தால் உள்ளே அமிருத ரஸமாக இளநீர் இருப்பதை இந்தச் சிதறுகாய் உணர்த்துகிறது என்றும் கூறுவர்.

பிள்ளையாருக்குப் போடுகிற சிதறுகாய் ஏழைக் குழந்தைகளுக்குப் ப்ரஸாதமாகக் கிடைக்கிறது. ஏழை எளியவர்களின் தெய்வமான பிள்ளையார், ஏழைக் குழந்தைகளுக்கு இதில் முன்னுரிமை கொடுத்திருப்பதில் ஆச்சரியம் இல்லைதானே.

இந்த இடத்தில் இன்னொரு விஷயத்தையும் சொல்லியாக வேண்டும். இன்றைக்கு எந்த தெய்வத்தின் சந்நிதியிலும் அர்ச்சனை செய்து தேங்காய் உடைத்து நிவேதனம் செய்யும் மரபு - இந்தத் தேங்காய் உடைக்கும் பழக்கமே பிள்ளையார் அருளால் வந்ததுதான்.

விக்னேச்வரர் தம் அப்பாவான ஈசுவரனைப் பார்த்து, "உன் சிரசையே எனக்கு பலி கொடு" என்று கேட்டுவிட்டாராம்.

எல்லாவற்றையும் காட்டிலும் உயர்ந்தது எதுவோ அதைத் தியாகம் பண்ணினால்தான் மஹாகணபதிக்குப் ப்ரீதி ஏற்படுகிறது.

அவ்வளவு பெரிய தியாகம் பண்ணுவதற்குத் தயார் என்பதற்கு அறிகுறியாகத்தான் ஈசுவரனைப் போலவே மூன்று கண்களை உடைய தேங்காயை ச்ருஷ்டித்து அந்தக் காயை அவருக்கு நாம் அர்ப்பணம் பண்ணும்படியாக ஈசுவரன் அனுக்ரஹித்திருக்கிறார்.

### பிள்ளையார் திருவுருவ தத்துவம்

பிள்ளையார் யானைத் தலையும் மனித உடலும் கொண்டுள்ளார். யானைத் தலையுடைய தெய்வம் என்று மாற்று மதத்தவர்கள் கேலி பேசுவதைக் கேட்கிறோம்.

இந்த தெய்வ வடிவத்திற்குப் பௌராணிக ரீதியான விளக்கம் உண்டு. அதுபோலவே தத்துவ ரீதியான விளக்கமும் உண்டு.

அம்பிகையின் சரீரத்தில் அவளது இயல்பான தெய்விக மணத்திற்கு மணம் கூட்டும் மஞ்சள் பொடி, குங்குமம், வாசனைப் பொடி முதலியவற்றைத் தானே தன் சரீரத்திலிருந்து வழித்துப் பிசைந்து ஒரு வடிவம் தந்து அதற்கு உயிரூட்ட கணபதி ஆவிர்பாவம் ஆனதாக புராணம் கூறுகிறது. கஜமுகாசுரனை அழிக்க அம்பிகை படைத்த உருவம் இது.

அம்பிகையின் திவ்ய மங்கள சரீரத்திலிருந்து மங்கள வஸ்துவான மஞ்சள் பொடியை வழித்து மூலப் பிள்ளையாரை ச்ருஷ்டித்ததால்தான் இன்றைக்கும் எந்த சுபகார்யத்தின் ஆரம்பத்திலும் மஞ்சள் பொடியைப் பிள்ளையாராகப் பிடித்து வைத்துப் பூஜை செய்கிறோம்.

தேவகணங்கள், மனித வர்க்கம், விலங்கினம், பூதகணங்கள் என அனைத்து கணங்களுக்கும் நாயகனாக இந்த தெய்வம் விளங்குவதைக் குறிக்கவே -

கழுத்துக்கு மேலே விலங்காகிய யானை முகம்; கழுத்துக்குக் கீழே - குழந்தை வடிவிலான மனித உரு; பானை வயிறும் குறுகிய கால்களும் பூத கணங்களைப் போன்று அமைந்துள்ளன; தேவவர்க்கத்தைக் குறிக்க நான்கு கரங்கள்; ஐந்தாவது கரம் தும்பிக்கை; தேவர்களுள் முதல் பூஜை பெறும் தெய்வமாக இவர் இருக்கிறார்.

யானை முகம் தத்துவரீதியாக ப்ரணவ ஸ்வரூபம் என்பர். ப்ரணவ வடிவம் அமைந்துள்ளதை நோக்குகையில் - யானையின் காது, தலை, துதிக்கை ஆகிய மூன்றும் சேர்ந்தது போல் தோன்றும். எனவே பிள்ளையார் ஓங்கார மூர்த்தி என்பதை உணர வேண்டும்.

யானைக்கு புத்திக் கூர்மை, ஞாபக சக்தி எல்லாம் மிக அதிகம்; பிள்ளையார் அறிவே வடிவானவர்.

வலப்பக்கத்தில் தந்தம் இல்லாமலும் இடப்பக்க வாயோரம் தந்தத்தோடும் காட்சி தந்து - தந்தையின் அர்த்த நாரீச்வரத் தத்துவத்தை நமக்குப் புகட்டுகிறார். ஆண் யானைக்கு தந்தம் உண்டு; பெண் யானைக்கு தந்தம் இல்லை. எனவே பாதி ஆண் யானையாகவும் பாதி பெண் யானையாகவும் முகத்தளவில் காட்டுகிறார் கணநாதர்.

அவனது பேழை வயிறு அண்ட சராசரங்கள் அனைத்தும் அவனுள் அடக்கம் என்பதைக் குறிக்கிறது. கச்சையாக அவர் அணிந்துள்ள பாம்பு - சக்தியின் சின்னம்.

விநாயகரின் ஐந்து திருக்கரங்களில் மேலே உள்ள வலக்கரம் அங்குசத்தைத் தாங்கியுள்ளது. யானைமுகக் கடவுள் ஜீவர்களை நல்ல வழியில் நடத்துகிறார்; அதற்கு அறிகுறியாக இருப்பது இந்த அங்குசம்.

மேலே உள்ள இடக்கரத்தில் பாசம் உள்ளது; கணேசர் தீவினையாளர்களை அவன் பாசத்தைக் கொண்டு கட்டி அடக்குகிறார்.

கீழே உள்ள வலக்கரம் ஒடித்த ஒற்றைத் தந்தத்தையும், இடக்கரம் மோதகத்தையும் தாங்கி உள்ளன.

ஐந்து கரங்களும் படைத்தல், காத்தல், அருள் புரிதல் முதலான ஐந்து தொழில்களையும் குறிக்கின்றன. விநாயகரின் வாகனம் மூஞ்சூறு.

### மூஞ்சூறு எப்படி யானையைச் சுமக்க முடியும்?

ஆன்மா பெரியதில் எல்லாம் மிகவும் பெரியதாகவும், நுட்பமானவற்றிலேயே மிக நுண்ணியமானதாகும் உள்ளது என்பதையே இது காட்டுகிறது. உடல் சிறிதானாலும் பெரிதானாலும் உள்ளிருக்கும் ஆத்ம வஸ்து ஒன்றே என்பதையும் இது குறிக்கிறது.

மூஞ்சூறு மண்ணைக் குடைவதுபோல அறிவைத் தோண்டி ஆய்பவன் ஞானத்தைப் பெற முடியும் என்பதையும், இறைவனிடம் பேரன்பு பூண்டால் வாழ்க்கைச் சுமை தெரியாது என்பதையும், இந்த மூஞ்சூறு வாகனம் உணர்த்துகிறது.

**Sakthi Murugan Jewellery**
Silver, Gold, Diamond & Birth Stone
New No. 225, (Old No. 116),
Triplicane High Road,
Triplicane, Chennai - 600 005.
(Opp Rathna Cafe)
**Cell : 9840589646**
**Tel : 43568668**

## அருள்மிகு எல்லையம்மன் ரேணுகா பரமேஸ்வரி திருக்கோயில் திருப்பணிக்கு உதவுவீர்



அருள்மிகு எல்லையம்மன் கோயிலின் திருப் பணிக்கு ரூபாய் 75,00,000 லட்சம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ஆகவே பொது மக்களும் ஆன்றோர்களும் நண்பர்களும் மனமுவந்து கோயிலின் திருப்பணிக்கு தங்களால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

மேலும் பக்தர்கள் கோயிலின் திருப்பணிக்காக நிதி உதவி மட்டுமல்லாமல் கோயிலுக்குத் தேவையான செங்கல், மணல், ஜல்லி, சிமெண்ட் போன்றவற்றையும் தங்களால் இயன்ற அளவு வாங்கித் தரலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.


**அஸ்கர் பயிற்சி நிறுவனம்**

நிறுவிய ஆண்டு – 1980
நிர்வாகம் அஸ்கர் கல்வி டிரஸ்ட் – முஸ்லீம் சிறுபான்மை கல்வி நிறுவனம்
102, டாக்டர் பெசன்ட் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 14

+2 STATE BOARD & CBSE

X STD STATE BOARD MATRIC ANGLO INDIAN BOARD & CBSE

X STD + 2 NIOS NATIONAL INSTITUTE OF OPEN SCHOOLING

+2 பாடங்கள்
கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், கம்ப்யூட்டர்
வணிகக் கணிதம், வணிகவியல், பொருளியல், கணக்கியல்
10ம் வகுப்பு
அனைத்து பாடங்கள் தமிழ் மற்றும் ஆங்கில மீடியம்

Spoken English கற்றுத் தரப்படும்

தொடர்பு கொள்க : 9884326917



**NELLAI SOUP'S**

100% Pure Vegeterian

❖ Tomato ❖ Mushroom
❖ Vegetable ❖ Plantainpith



மிக குறைந்த முதலீட்டில் மாதம் 8,000 ரூபாய்க்கு மேல் வருமானம் பெற எங்களை அணுகவும்

Contact : 044-28475757,
Cell : 9094777272, 9094776868

NS ASSOCIATIES
No. 25/10, Mohammed hussain Khan Lane,Royapettah, Chennai - 600014


## அரைக்கீரை

கீரை வகைகளில் இதுவும் ஒன்று. அரைக்கீரையை ஒருமுறை பயிரிட்டால் அது பல மாதங்களுக்குப் பலன்தரும்.

அரைக்கீரையைத் தினசரி சாதத்துடன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் உடலுக்கு நல்ல பலன் ஏறும். உடலில் ஏற்பட்ட பல வியாதிகளைக் குணப்படுத்தக்கூடிய சக்தி அரைக்கீரைக்கு உண்டு. அரைக்கீரையின் சக்தி எப்படிப்பட்டது என்பதை இன்னும் பலர் அறியாமலிருக்கின்றனர்.

எந்த வகையான வியாதிகளையும் அரைக்கீரை குணப்படுத்திவிடும். எந்த வியாதியஸ்தரும் அரைக்கீரையைப் பயமின்றிச் சாப்பிடலாம்.

அரைக்கீரையைத் தினசரி சாப்பிட்டு வந்தால் உடலில் உஷ்ணம் அதிகம் உண்டாகும். சூட்டை கிளப்பிவிடும் என்று சிலர் பயந்துகொண்டு அரைக்கீரையைச் சாப்பிடமாட்டார்கள். அரைக்கீரையைப் பற்றி அறியாதவர்கள் கூறும் அறிவுரையாகும் இது.

## உங்கள் குழந்தை கல்வியில் நாட்டம் செலுத்த வேண்டுமா?

### ஹயக்கிரீவரை வணங்குங்கள்

ஒரு காலத்தில், யாக்ஞ வல்கியரிடமிருந்த யஜுர்வேதம் காணாமல் போய்விட்டது. ஏதோ காரணத்தால் அவருடைய குரு அவருக்கு அளித்திருந்த சாபத்தால் அப்படி நடந்தது. பிராயச்சித்தமாக கடும் தவத்தை மேற்கொண்டார் யாக்ஞவல்கியர். சூரியன் மனம் மகிழ்ந்து அவருக்குக் காட்சி கொடுத்தார். பின் அவரே குதிரை முகத்தோடு வந்தார். மீண்டும் யஜுர் வேதத்தை மனப்பாடமாகச் சொல்லிக் கொடுத்தார். அதனால், அந்த வேதம் 'வாஜசநேயி சம்ஹிதை' என்று வழங்கலாயிற்று. வாஜ் என்றால் குதிரை. ஹயக்கிரீவர் அவதாரத்திற்கும், பாதி குதிரையாக வந்த சூரியனுக்கும் தொடர்பு உண்டு. மதுகைடபன் என்ற இரு அரக்கர்கள் எல்லா வேதங்களையும் சுருட்டிக் கொண்டு கடலுக்கடியில் ஒளித்து வைத்தார்கள். அப்போது, மகாவிஷ்ணுவே ஹயக்கிரீவராக வந்து கடலுக்குள் மூழ்கி அரக்கர்களை ஒழித்து வேதங் களைக் காப்பாற்றி வெளியே கொண்டுவந்தார்.

சரஸ்வதியைப் போல் கல்விக்கு ஹயக்கிரீவரும் அதிபதி. அவருடைய விக்கிரத்தில் நான்கு அல்லது எட்டுக் கரங்கள் இருக்கும். அவற்றில் விஷ்ணுவுக்குரிய ஆயுதங்களும் சின்னங்களும் இருக்கும்.

தசாவதாரத்தை நவராத்திரி சமயங்களில் வீட்டில் கொலு பொம்மையாக வைப்பார்கள். மனிதம் என்ற வார்த்தையை புரிய வைப்பதற்கும் தீயவர்களை அழித்து தர்மத்தை காப்பதற்கும் தான் அவதாரங்கள் உலகில் எடுக்கப்பட்டன. அவதாரம் என்றால் கீழே இறங்கி வருதல் என்று பொருள். மேல் உலகில் இருந்து பூமிக்கு இறங்கி வந்து பக்தர்களை காப்பதற்காகத்தான் அவதாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. நான் என்கிற நினைப்பு இல்லாமல் மமதை கொள்ளாமல் எப்போதும் கடவுளை எண்ணுவதற்கே தசா அவதார கதைகள் சொல்லப்பட்டுள்ளன என்பதை குழந்தைகள் உணர வேண்டும். எல்லோரும் விஷ்ணுவை வணங்கி ஆனந்தம் பெற வேண்டும்.


**C.S.K. MEGA CATERING SERVICES**

*All Function Catering Contractor*





கல்யாண வைபவங்களுக்கும் வீட்டில் நடக்கும் எல்லா சுப நிகழ்ச்சிகளுக்கும் நல்ல தரமான முறையில் அறுசுவை ருசியுடன் சுத்தமான சைவை உணவு செய்து தரப்படும். உரிமையாளர் : C.S. கிருஷ்ணன்

No. 51/6, Venkatachalam Street, Triplicane, Chennai - 5
Res : Old No.10, New No.26, Theetharappan Street, (Rathna Cafe Backside) Pycrofts Road, Triplicane, Chennai - 600 005.
Mobile : 92821 37278, 6537 1644



**JB**

**பேட்டரி சேல்ஸ் & சர்விஸ்**

Authorised Dealer : EXIDE SF AMARON

இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள் கிடைக்கும்.
மின்சார தடையா? கவலை வேண்டாம்
(புதிய UPS மற்றும் இன்வெர்ட்டர்கள்)
மற்றும் UPS, இன்வெர்ட்டர் பேட்டரிகளும் சேல்ஸ் சர்வீஸ்



300 VA to 5 KV




புது எண் : 11, பழைய எண்.6, செல்லப்பிள்ளையார் கோயில் தெரு, இராயப்பேட்டை, (ஜாம்பஜார் அருகில்) சென்னை – 600014.
(All Master Card Accepted)

செல் : 98408 88051, 97108 80700, 32432230

A/C Show Room
BIS 916
HALL MARK
JEWELLERY
PINKY JEWELLERS
பிங்கி ஜுவல்லர்ஸ்
தங்க
நகைகளின்
சங்கமம்!

916 BIS HALLMARK JEWELS
Lowest Wastage Charges
No Making Charges
NON KDM JEWELS
NoWastage Charges
No Making Charges
All Birth Lucky Stones Available
We Accept all Credit and Debit Card
We have also introduced a
Monthly Saving Scheme
No.42/95, Pillaiyar Koil Street, Triplicane,
Chennai - 600 005. (Near Zambazaar Market)
Ph : 28612062, 43568780,
Cell : 9444044864, 9841174325
5% Off On
916 KDM
jewellery

# சிரிப்போ... சிரிப்பு.....!

## டாக்டர் வெ. சீதாராமன்

❖ **என்ன இது, இந்த புதுகட்சியோட தலைவர் எப்பவும் என் 'ஆவியில் கலந்த அன்பர்களே'ன்றாரு?**

இதுக்கு முந்தி அவர் 'இடியாப்பா' கடை வெச்சிருந்தவராச்சே!

❖ **தனக்கென ஒரு முத்திரையை பதிக்கிறவர் நம்ம தலைவருன்றியே எந்த விஷயத்தில்?**

புதுமாதிரியான 'ரப்பர் ஸ்டாம்ப்' செஞ்சு வெச்சிருக்கறதிலதான்!

❖ **அவன் : இந்த போட்டோல 'சீனரி' அருமையா இருக்குதே, இதை 'எங்கே' எடுத்தே?**

இவன் : என் மச்சினன் போட்டோ 'ஆல்பத்திலே'யிருந்து!

❖ **அவள் : தாளிக்க, வறுத்தெடுக்க நீ உபயோகிக்கறது எதை?**

இவள் : என் 'வீட்டுக்காரரை'!

❖ **எல்லா 'ஸ்டேட்டுக்கும்' ரயில்லேயே போய் பார்த்திருக்கேன்றியே, நீ பார்க்காதது எதுவும் இல்லையா?**

இருக்கே, ரயில் 'டிக்கெட்'!

❖ **உங்க மேனேஜரால ஒரு 'காரியம்' ஆகணும், செய்வாரா?**

அவர் செய்ய மாட்டாரு, எங்க 'புரோகிதரை' வேனணா கேட்டுப் பார்க்கறேன்!

❖ **எதுக்கு 'சரித்திர' புத்தகத்தை உங்க தலைவர் 'பூஜை'ல வெச்சிருக்கார்?**

அவர் 'வரலாறு படைத்தவர்' ன்னு எல்லாரும் சொல்லணுமாம்!

❖ **பயில்வான் பெண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்புடா!**

ஏன்?

பூரி கட்டைக்கு பதிலா 'கர்லா' கட்டைல அடிக்கறா!

❖ **ஏன் 'வில்லுபாட்டு'கேக்க வந்த நீ, முன் ரோவை விட்டுட்டு பின்னால போயிட்டே?**

வில்லுலயிருந்து 'அம்பு' வந்திடுமோன்னு பயந்துதான்!

MP Batteries
Old No.29, (New No.16), Subadral Street, Triplicane, Chennai - 600 005.
(Opp. Star Theatre & Near Thiruveeteswaran Koil)
Tel : 044-4266 4630, Cell : 93813 30160, 98408 12930, 93823 30160

XENON ALWAYS ON
DEALERS :
EXIDE | AMARON | TATA
SALES & SERVICES :
BATTERIES, UPS, INVERTORS, ELECTRICAL WORKS
Credit Card Accepted

OFFICE FOR RENT
300 Sq. Office
Contact
Thameem Ansari
Cell : 9789822025
2/57, Shaik Dawood Street
Royapettah, Chennai - 600014.
(Near Labbai Mosque)

# அருட் பெருஞ் ஜோதி

ஆகாசத் தலமாக விளங்குவது சிதம்பரம் ஆகும். பஞ்ச பூத ஸ்தலங்களில் சிதம்பரமும் ஒன்று. சிதம்பரத்தில் தில்லையம் பலத்தில் ஆடல் பெருமான் அழகுறக் காட்சித் தருகிறான். தில்லை நடராஜனின் ஆனந்தக்காட்சியை ஐந்து மாதக்குழந்தையாக இருக்கும்போதே காணும்பேறு பெற்றவர் வள்ளலார்.

சிதம்பரத்திற்குப் பக்கத்தில் மருதூர் எனும் கிராமம் உள்ளது. ஆன்ம நேய ஒருமைப்பாடு என்ற கொள்கையை எடுத்துரைத்த இராமலிங்க வள்ளலார் திரு அவதாரம் செய்த புண்ணிய ஸ்தலம் மருதூர்.

இராமையா பிள்ளை மருதூரில் கிராமக் கணக்கர். இராமையா பிள்ளைக்கு ஆறாவது மனைவியாக வாழ்க்கைப்பட்டார் சின்னம்மையார். ஐந்து மனைவியரும் மகப்பேறின்றி ஒருவர் பின் ஒருவராக இறக்கவே இராமையா பிள்ளை ஆறாவது திருமணம் செய்து கொண்டார். இராமையா பிள்ளைக்குச் சபாபதி, பரசுராமன் என்னும் இரு மகன்களும், உண்ணாமலை, சுந்தரம் என்ற இரு பெண்களும் பிறந்தனர். 1823 அக்டோபர் 5ஆம் நாள் மாலை 5.30 மணி அளவில் ஐந்தாவது மகவாகப் பிறந்தவர்தான் இராமலிங்கம்.

குழந்தை பிறந்ததும் அதனைக் கோயிலுக்கு எடுத்துச் சென்று வழிபடுவது வழக்கம். அம்முறையைப் பின்பற்றிச் சிதம்பரம் சென்றனர் இராமையா பிள்ளை குடும்பத்தினர். ஐந்து மாத இராமலிங்கத்திற்கு ரகசியமாயிருந்த சிதம்பர ரகசியம் வெட்ட வெளிச்சமாகப் புலப்பட்டது.

இராமலிங்கர் தமது குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழந்தார். எனவே மருதூரை விட்டுச் சென்னைக்கு வந்தார். சென்னையில் தமது அண்ணன் சபாபதி குடும்பத்தில் ஒருவராக வளர்ந்தார். தனது அண்ணி பாப்பாத்தி அம்மையாரைத் தாயாக மதித்தார்.

இராமலிங்கர் ஏட்டுக் கல்வி கற்பதில் அவ்வளவாக நாட்டம் கொள்ளவில்லை. ஊர்ப்புறம் திகழும் காட்டிலும், தோப்பு துரவுகளிலும் தனிமையாக இருப்பதிலேயே ஆர்வமாக இருந்தார். கந்தகோட்டத்திற்குச் சென்று பாடவும் செய்தார். இதனை அறிந்த அண்ணன் சபாபதி



அவர்கள் இராமலிங்கத்தை பாடச் சொல்லக் கடல் மடை திறந்த வெள்ளம் போலக் கவிதை மழையைப் பொழிந்தார்.

இராமலிங்கர் பாடியதை அறிந்த குரு, ''இனிதான்தாம் இராமலிங்கத்திடன் கல்வி கற்க வேண்டும்'' என்று எண்ணி அவரை வீட்டுக்குத் திருப்பி அனுப்பிவிட்டார். இதனைச் சரியாக புரிந்து கொள்ளாத சபாபதியோ, இராமலிங்கத்தைத் திட்டினார். இனி அவருக்குச் சோறு கொடுக்கக்கூடாது என்று தன் மனைவி பாப்பாத்தி அம்மாளுக்கு உத்திரவு பிறப்பித்தார்.

தாய் மனம் வருந்தியது. இராமலிங்கத்தை வீட்டின் பின்புறம் வரச்சொல்லி ஒவ்வொரு நாளும் உணவு கொடுத்து வந்தார் அண்ணியார்.

சென்னை, ஏழு கிணறு வீராசாமிப் பிள்ளைத் தெருவில் 38-வது எண்ணில் உள்ள தனி அறையில் இராமலிங்கம் தியானத்தில் அமர்ந்தார். முருக உபாசனையில் முழுமையானார். உண்ணும்போது தவிர மற்ற நேரங்களில் வெளியே வருவதில்லை. இவ்வாறு பல நாட்கள் சென்ற பின் ஒருநாள் சுவரில் மாட்டப்பட்டிருந்த கண்ணாடியில் தணிகை முருகன் தோன்றிக் காட்சியளித்தான். முருகப் பெருமான் காட்சியளித்த அக்கண்ணாடி இன்றும் அதே வீட்டில் உள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

ஒரு சமயம் உடல் நிலை முடியாமல் போகவே இராமலிங்கரின் தமையனார் சபாபதி புராணப் பிரசங்கம் செய்ய முடியாமல் போனது. ஜார்ஜ் டவுன் லிங்கிச் செட்டி தெரு (மறைமலை அடிகள் நூலகம்) சோமு செட்டியார் இல்லத்தில் திருஞான சம்பந்தர் பெருமை பற்றிப் புராணப் பிரசங்கம் செய்ய வேண்டும் சபாபதி. தன்னால் உடல்நிலை கருதி வர முடியாது என்பதை தம்பியிடம் சொல்லி சோமு செட்டியாரிடம் தகவல் சேர்ப்பிக்கச் சொன்னார்.

என்ன ஆச்சரியம்! அண்ணன் செய்ய வேண்டிய பிரசங்கத்தை இராமலிங்கம் வெகு சுவாரஸ்யமாக செய்து அருளினார். திருஞான சம்பந்தப்பெருமான் தமது பெருமையை உரைப்பது போன்று அவ்வுரை இருந்ததாம். அண்ணன் செய்ய வேண்டிய வேலையைத் தம்பி செய்து அண்ணனுக்குப் பெருமை சேர்த்தார். அண்ணனும் மனது மாறித் தம்பியிடம் பயபக்தியுடன் பழகினார்.

சென்னையில் இராமலிங்கர் வாழ்ந்தபோது தினசரி திருவொற்றியூர்க் கோயிலுக்குச் சென்று வழிபடுவார். அங்கே ஒரு சாமியார் யாரைப் பார்த்தாலும் ''நாய் போகிறது; கழுதை போகிறது'' என்பார். இராம லிங்கரைப் பார்த்தவுடன்தான் 'இதோ ஒரு முழு மனிதன் போகிறான்' என்று சொல்லித் தன் ஆண்டித் தோற்றத் திற்காக வெட்கப் பட்டுத் தன் மறைவிடங்களை மறைத்துக் கொண்டாராம்!

இராமலிங்கம் திருமணம் செய்து கொண்டாலும் அதிக நாட்கள் அவர் மனைவி பூவுலகில் இல்லை. தனக்கோடி அம்மையார் என்பது இராமலிங்கரின் மனைவியின் பெயர்.

மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்று இரண்டு உரைநடை நூல்களை ராமலிங்கர் எழுதியுள்ளார்.

பசுவின் மகவைக் கொன்ற தன் மகனைத் தேரில் இட்டுக்கொன்ற மனுநீதிச் சோழனின் கதையாகும் மனுமுறை கண்ட வாசகம் என்பது.

கருங்குழியில் இராமலிங்கம் இருந்தபோது பல அற்புதங்கள் நடந்தன. ஒருநாள் இரவில் எழுதிக் கொண்டிருந்தார். எண்ணெய் விளக்கு மங்கவே, பக்கத்தில் இருந்த தண்ணீரை ஊற்றி விளக்கை எரியச் செய்தார் இராமலிங்கம். **(தொடரும்)**

**TRIPLICANE NEWS**

கௌரவ ஆலோசகர்கள்:
T.T. முனுசாமி,
G. மோகனகிருஷ்ணன்,B.A.B.L.,
(செயலாளர்-சென்னை உயர்நீதிமன்றம்)
B. குமார்,M.A.B.L.,
D. கண்ணன்,M.L.,
S. கேசவன்,B.A.B.L.,
E. ராமண்ணா,M.A.B.L.,
T. தேவேந்திரன்,M.A.B.L.,
R. அப்துல் முபீன்,B.A.B.L.,
S. ராஜ்குமார்,B.A.B.L.,
வெண்ணிலா ராஜ்குமார்,
மேலாளர்: C.முகமதுசுலைமான்
தலைமை நிருபர் :
ம.வெங்கடேசன்,M.A.

***TRIPLICANE NEWS :***
நிர்வாக அலுவலக முகவரி :
எண்.ப.எண். 14, புதிய எண்.43,
மல்லன் பொன்னப்ப தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
செல் : 94443 18719, 9940627772.
E-mail :
triplicanenews@yahoo.com

## வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

அன்பார்ந்த வாசகர்களே!

தங்கள் பகுதியில் நடக்கும் விழாக்கள், சமுதாய நிகழ்ச்சிகள், ஆன்மிக நிகழ்ச்சிகள் போன்றவற்றை போட்டோவுடன் டிரிப்ளிகேன் நியூஸ் பத்திரிகைக்கு அனுப்பி வைக்கவும். தாங்களும் கதை, கவிதை, கட்டுரை எழுதி அனுப்ப வேண்டுகிறோம்.

**ஆசிரியர்**

# திரைப்படங்கள், தொலைக்காட்சி, பத்திரிகைகளில் ஆபாசம் - வன்முறை உணர்வுகளை தூண்டுவதை தடுக்க வேண்டும்

## பத்திரிகையாளர்களின் பயங்கவாத எதிர்ப்பு மாநாட்டில் தீர்மானம்




திரைப்படங்கள் மற்றும் அனைத்து செய்தி ஊடகங்களிலும் ஆபாசம் - வன்முறை - கொள்ளை போன்ற உணர்வுகள் ஊட்டி வளர்க்கப்படுவதை தடை செய்ய வேண்டும். பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரால் அப்பாவிகள் பழி வாங்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்க மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் சார்பில் சென்னை நேரு விளையாட்டு அரங்கில் பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. தனியார் தொலைக்காட்சி நிறுவனர் டி.தேவநாதன் தலைமை வகித்தார். அகில இந்திய பத்திரிகையாளர் சங்கத்தலைவர் சுரேஷ் அக்வரி முன்னிலையில் பயங்கரவாதம் குறித்த விவாத அரங்கு ரமேஷ் பிரபா ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

மாலையில் நடைபெற்ற விழாவில் இந்திய பிரஸ் கவுன்சில் தலைவர் மற்றும் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜி.என்.ரே. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.வி. தங்கபாலு, சென்னை மாநகர மேயர் மா. சுப்ரமணியன், கே. பாக்யராஜ், வி.சேகர், ராஜேஷ், வழக்கறிஞர் அருள்மொழி உள்ளிட்டோர் கலந்துகொண்டு பேசினர்.

குழந்தைகளின் உள்ளத்தில் வன்முறை உணர்வுகள் துளிர்க்காத வகையில் பெற்றோர் குறிப்பாக அன்னையர் பாசத்தையும், அன்பையும் பொழிந்து நன்னெறிப்பண்புகளை வளர்க்க வேண்டும்.

பள்ளிகளில் அன்பு, பாசம், நேர்மை, கருணை போன்ற நல்லியல்புகள் உருவாக்கக்கூடிய நீதி போதனைகளை உள்ளடக்கிய பாடங்களை கற்பிக்க வேண்டும்.

திரைப்படங்கள் மற்றும் அனைத்து ஊடகங்களிலும் ஆபாசம், கொலை, கொள்ளை போன்ற உணர்வுகள் ஊட்டி வளர்க்கப்படுவதைத் தடுக்க வேண்டும். இதற்காக மத்திய, மாநில அரசுகளால் தொலைக்காட்சி தணிக்கைக் குழுக்களை உருவாக்க வேண்டும். சுயமரியாதை இயக்கங்கள், மறுமலர்ச்சி அமைப்புகள், சேவை நிறுவனங்கள், மனித நேய ஸ்தாபனங்களை ஊக்குவித்து வளர்க்க வேண்டும்.

பொதுமக்களை குறிப்பாக ஏழை, எளிய மக்களை அதிலும் குறிப்பாக இளைஞர்களை விரக்திக்கு உள்ளாக்கும் வகையிலோ, கோபமூட்டும் வகையிலோ, அரசியல்வாதிகள், காவல்துறையினர் மற்றும் உயர் அதிகாரிகளின் நடவடிக்கைகள் அமையக்கூடாது. மிதமிஞ்சிய ஆடம்பரம், அளவுக்கு மீறிய அடக்குமுறை, உயர்மட்டம் முதல் கடைகோடி வரை கரை காணாத லஞ்ச ஊழல், அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றை அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் கைவிட வேண்டும்.

பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அப்பாவிகளை தண்டிப்பது, வேண்டாத நபர்களை பயங்கரவாத முத்திரை குத்தி கைது செய்வது, என்கவுண்டர் என்ற பெயரில் எந்தத் தவறும் இழைக்காதவர்களைக் கொன்று பழிவாங்குவது போன்ற அரசு பயங்கரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

பயங்கரவாதத்தை தடுக்கவும், அவற்றை கண்காணிக்கவும், அதன் நடவடிக்கைகளை விசாரிக்கவும், அமைதியான சூழலை ஏற்படுத்தவும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அறிஞர்கள், சான்றோர்கள் மற்றும் பத்திரிகையாளர் சங்க நிர்வாகிகளைக் கொண்ட குழுக்களை மாநில, மாவட்ட அளவில் அமைக்க வேண்டும். இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டு ஏற்பாடுகளை தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தலைவர் டி. எஸ். ரவீந்திரதாஸ் செய்திருந்தார்.

## தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தின் திருச்சி மண்டல 2வது மாநாடு

தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தின் திருச்சி மண்டல 2வது மாநாடு 29-08-2009 காலை 10.30 மணி அளவில் பெரம்பலூர் ஜே. கே. மகாலில் நடைபெற உள்ளது.

அம்மாநாட்டில் திரு. கே. என்.நேரு, தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் சிறப்புரையாற்றுகிறார்.

மாண்புமிகு ஆ.ராசா, மத்திய தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் விழாப் பேருரையாற்றுகிறார்.

திரு. என்.செல்வராஜ், தமிழக வனத்துறை அமைச்சர், திரு. து. நெப்போலியன் சமூகநீதி மற்றும் அமலாக்கத்துறை மத்திய இணை அமைச்சர் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

திரு. ஆ. இளவரசன், மாநிலங்கள் அவை உறுப்பினர், திரு. தொல்திருமாவளவன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம். விஜயகுமார், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர், திரு. அனில் மேஷ்ரம்பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர், ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்து வாழ்த்துரை வழங்க இருக்கிறார்கள்.

இவ்விழாவில் தாங்களும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள.

**Air Cool Service**
Specialist in:
Air Conditioner, Washing Machine, Refrigeration and Microwoven
Sales & Service
New # 55, Old # 25, Cella Pillaiyar Koil Street, Royapetta, Chennai - 600 014.
*N.M. Ragu*
Cell : 9840077725, Off : 4356 7621

**துரைப்பாண்டியன்**
**சமையல்**
**கான்ட்ராக்ட் குக்**
பு.எண்.8, (ப.எண்.13), பொன்னப்பத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.
**செல் : 98404 43002**

**Arranged loan for purchase of Vacant land, Home, constraction and Mortgage.**
**Interest Rate : 10.5% to 16%**
No.33/4 & 5, Jaiz Complex, 1st Floor, Triplicane High Road, (opp. to Big Mosque), Chennai - 600005.
**Ph : 044 - 28520056**
**Cell : 9382121639**
email : mrajaestate@yahoo.com

**தாய் ரியல் எஸ்டேட்**
**வீடுகள் வாங்க, விற்க வாடகைக்கு அணுகவும்**
எண் : 161/319, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, எல்லை அம்மன் கோயில் முன்புறம், ஐஸ்அவுஸ், சென்னை-5
**B.S.VASAN-9941172464**
**9841128212,43588555**
**S.SIVA - 9840075383**

**KING REAL ESTATE**
**கிங் ரியல் எஸ்டேட்**
K. **விஜயன்,** Cell : 9941472675
வீடு வாங்க, விற்க அணுகவும்
NO.25/13, தானப்ப செட்டி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5
எம்ப்ராய்டரிங் சிறந்த முறையில் செய்து தரப்படும்

TRIPLICANE NEWS FORTNIGHTLY REGISTRAR OF NEWSPAPER FOR INDIA. R.Dis.No. 1506/2004 TNTAM/2005/17705 விலை - ரூ.2/-



# CHENNAI REAL PROMOTERS (P)LTD

## திருவல்லிக்கேணி

Regd.off : AI-24, (Old No: AI-124), 8th Main Road, Shanthi Colony, Anna Nagar, Chennai - 600 040. Ph : 044-43016611, 43016461

**முன்பணம் ரூபாய் - 20,000 மட்டும் / சென்னையிலிருந்து 87 கி.மீ**

## CHENNAI REAL PROMOTERS PVT.LTD

PRESENTS

# JAIHIND NAGAR

PLAN SHOWING THE PROPOSED LAYOUT OF HOUSE SITES IN S.NO. 11 / 9 , 10, 13 & 12 / 1

V.NO.1, T.C. KANDIGAI TIRUTTANI TALUK, THRUVALLUR DISTRICT.

L.P. No :




**CHENNAI REAL PROMOTERS PVT.LTD**

REGD OFF-
Old No :AI 124,New No - 24,8th Main Road,
Shanthi Colony, Anna Nagar Chennai - 600 040.
Ph : 044 - 43016611, 43016461
e- mail:chennairealpromoters@gmail.com

BRANCH OFF-
238/2/4 Triplicane, High Road, 1st Floor,
Triplicane, Chennai - 600 005.
Ph : 044 - 43567241

267, S.R.P Koil Street, Thiru, Vi, Ka Nagar
(Bus Terminus) Chennai - 600011.
Ph : 044 - 32473337

**AREA STATEMENT**

| PLOT No. | Sqft. | PLOT No. | Sqft. |
|---|---|---|---|
| 1 | 1110.00 | 57 To 60 | 600.00 |
| 2 To 25 | 600.00 | 61 | 824.00 |
| 26 | 922.50 | 62 | 760.00 |
| 27 | 891.00 | 63 To 70 | 600.00 |
| 28 | 996.00 | 71 | 680.00 |
| 29 To 31 | 729.00 | 72 | 472.50 |
| 32 | 732.00 | 73 To 79 | 1050.00 |
| 33 To 34 | 735.00 | 80 | 862.50 |
| 35 | 739.00 | 81 | 862.00 |
| 36 | 744.00 | 82 To 119 | 600.00 |
| 37 | 1210.00 | 120 | 872.00 |
| 38 | 687.00 | 121 | 1012.00 |
| 39 | 597.00 | 122 | 622.50 |
| 40 | 607.50 | 123 | 660.00 |
| 41 | 622.50 | 124 | 694.00 |
| 42 | 637.50 | 125 | 724.00 |
| 43 | 652.50 | 126 | 757.50 |
| 44 | 667.50 | 127 | 795.00 |
| 45 | 679.00 | 128 | 825.00 |
| 46 | 691.00 | 129 | 862.50 |
| 47 | 709.00 | 130 | 900.00 |
| 48 | 732.00 | 131 | 934.00 |
| 49 | 846.00 | 132 | 972.00 |
| 50 To 51 | 637.00 | 133 | 1012.50 |
| 52 | 850.00 | 134 | 1042.50 |
| 53 | 567.00 | 135 | 1065.00 |
| 54 | 574.00 | 136 | 1119.25 |
| 55 | 582.00 | 137 | 1050.00 |
| 56 | 592.50 | 138 To 139 | 900.00 |

The Land Of Excellence

## மேலும் விபரங்களுக்கு

# Cell : 9941911421

எண் 238/2/4, முதல்மாடி, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, ரத்னாகேப் பேருந்து நிறுத்தம் அருகில், சென்னை - 600005.

சுலப தவணையில் வீட்டுமனைகள் வாங்க!
சென்னை ரியல் புரோமோட்டர்ஸ்க்கு வாங்க!

32473337, 43567231, 43567241

❖ இயற்கை எழில் சூழ்ந்த காற்றோட்டமான வசதியில் JaiHind Nagar அமைந்துள்ளது. ❖ சுவையான குடிநீர் வசதி உள்ளது. ❖ திருத்தணி to R.K. Pet பைபாஸ் ரோடிலிருந்து 1.6 Km -அருகில் அமைந்துள்ளது JaiHind Nagar. ❖திருத்தணி ரயில் நிலையத்திலிருந்து Jai Hind Nagar 14Km-ல் அமைந்துள்ளது. ❖ 24 மணிநேர பேருந்து வசதி, Share Auto வசதி உண்டு. ❖திருத்தணி கோயிலிலிருந்து JaiHind Nagar 15Km- ல் அமைந்துள்ளது. ❖ சோளிங்கர் கோயிலிருந்து Jai Hind Nagar 10 Km-ல் அமைந்துள்ளது. ❖ R.K.Pet Town -யிலிருந்து 5 Km -ல் JaiHind Nagar அமைந்துள்ளது. ❖ தார் சாலை ஒட்டியே Jai Hind Nagar அமைந்துள்ளது. ❖JaiHind Nagar அருகே 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள், பள்ளிக்கூடம், நூலகம், கோயில், சுகாதார நிலையம் மற்றும் பேருந்து நிலையம் அமைந்துள்ளது.

**எங்கள் நிறுவனத்திற்கு விற்பனை முகவர்கள் தேவை**

Owned, Published and Printed by A. Bakyaraj. Published from No.7, Ramasamy Maistry Street, Triplicane, Chennai - 5. and Printed at Wonder Prints, 14, Weavers Street, Triplicane, Chennai - 5. Editor : A.Bakyaraj